விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 014 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 18 வியாழக்கிழமை (02.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நெல்லுக்கு உத்தரவாத விலை
### விவசாய பிரதியமைச்சர்



(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் நெல்லுக்கான புதிய உத்தரவாத விலை அறிவிக்கப் படவுள்ளதாக விவசாயம் மற்றும் கால் நடை வளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

உர நிவாரணம் வழங்கப்படாத விவ சாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நட 15

## உற்பத்திப் பொருளாதாரத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை
### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

பொருளாதார ரீதியில் வீழ்ச்சிய டைந்திருக்கும் நாட்டைக் கட்டி யெழுப்ப பிறந்திருக்கும் புதுவருடத் தில் அனைவரும் உறுதியுடன் செயற்படுவோம். அதற்காக உற்பத்திப் பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலை 15

# மக்கள் கோரிய மாற்றம் ஏற்படும்
## நீதி அமைச்சர் ஹர்ஷன



(கொழும்பு)

மக்கள் கோரிய மாற்றத்தை மேற்கொள்வது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்தும்போது பாரிய பொறுப்பு அரச ஊழியர் களுக்கே இருக்கிறது. அதனால் பொதுமக்களுக் காக நாங்கள் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண் டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச் சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளின் கற்றல் செயற்பாடு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

அத்துடன் அனைத்துப் பாடசாலை 15

## வவுனியா குருமன்காட்டில் மோ.சைக்கிள் விபத்து
### பல்கலை மாணவன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் பல்கலைக்கழக மாண வன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இதில் வவுனியா வைரவப்புளியங்குளத்தைச் சேர்ந்த சந்திரபோஸ் ஸ்ரீகாந்தன் (வயது - 23) என்ற கொழும்புப் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவனே உயிரிழந்தவராவார். 15

## கடந்த கால அரசுகளை விமர்சிக்காது வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்
### அநுர அரசிடம் நாமல் எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

கடந்த கால அரசாங்கங் களை விமர்சிக்காது மக்க ளுக்கு வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்றுமாறு அநுர அரசிடம் நாமல் எம்.பி வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளை 15

## கிளிநொச்சியில் தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் வீதி யில், புகையிரதக் கடவைக்கு அருகாமையில் இயங்கி வந்த கையடக்கத் தொலைபேசி விற் பனை நிலையம்ஒன்று உடைக் கப்பட்டு அதிலிருந்த பொருட் கள் களவாடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நள்ளி ரவு இச்சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஆரம்ப கட்ட விசாரணையில், கடையில் பொருத் 15

## குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு ஒன்றிணைக
### சஜித் அழைப்பு

(கொழும்பு)

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டி யெழுப்பும் தேசியப் பணிக்கு ஆயத்தமாகும் அதேவேளை, வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன் னத சேவையை வழங்க நட வடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் தார்.

புத்தாண்டில் 15

## 24 மணித்தியாலங்களில் 7,264 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

காலை 6 மணியுடன் நிறை வடைந்த கடந்த 24 மணித்தி யாலத்தில் போக்குவரத்து விதிகளை மீறிய 7,264 சாரதிகளுக்கு 15

## மக்கள் சேவைக்காக அர்ப்பணிப்புத் தேவை
### பிரதமர் ஹரிணி



(கொழும்பு)

புதிய வருடத்தில் முன்னரைவிட பிரயத்தனங்களுடனும் உற்சாகத்து டனும் மக்களுக்கு அரச சேவையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் நாதம் தேசமெங்கும் ஒலிக்க வேண்டும்

## கலாநிதி செ.சேதுராஜா உரை



வலம்புரிப் பத்திரிகையின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா கடந்த டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற் றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், வலம்புரிப் பத்திரிகை 25 ஆண்டுகளாக மிகுந்த சிரமங் களின் மத்தியில் பல்வேறு இன் னல்களை எதிர்கொண்டு இன்று யௌவன பருவமடைந்து அழ காகப் பூரித்திருக்கின்றது.

தெளிவும் நேர்மையும் பக் கம் சாராமையுமே வலம்புரியின் கொள்கை. மேலும் வலம்புரிப் பத்திரிகையின் கல்வி ஊடாட்டம் கல்விச் சமூகத்திற்குப் பயனுறு தியாக இருப்பதை நாம் பார்க்க முடியும்.

அதிலும் ஆசிரியத் தலையங்கங் களில் வருகின்ற விடயங்கள் அனைத்தும் சமூகத்தை நன்னெறிப்படுத்துபவை யாகும்.

எங்கள் இனத்தின் சொத்தாகக் காணப் படும் வலம்புரியின் நாதம் தேசம் எங்கும் கேட்க வேண்டும் எனவும் அவர் தெரி வித்தார். (ரி)

சொலல்வல்லன் சோர்விலன் அஞ் சான் அவனை

இகல் வெல்லல் யார்க்கும் அரிது என் பது போல உண்மை, துணிவு, நேர்மை என்ற தாரக மந்திரத்தின் வழிநின்று உண்மையான செய்திகளை தெளிவுற துணிவுடன் வழங்கும் நாளிதழ் வலம் புரிப் பத்திரிகை ஆகும். இவ்வாறு நெல் லியடி மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் கலாநிதி செ.சேதுராஜா தெரி வித்தார்.

காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

# பயணிகள் கப்பல் சேவை இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை கார ணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தமி ழகத்தின் நாகப்பட்டினத் திலிருந்து காங்கேசன் துறைக்கான பயணிகள் கப் பல் போக்குவரத்து சேவை, இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் நில வும் காலநிலையைக் கருத் திற் கொண்டு கப்பல் போக் குவரத்தை மீண்டும் ஆரம் பிப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகக் குறித்த கப் பல் நிறுவனத்தின் முகா மைத்துவப் பணிப்பாளர் சுந்தர்ராஜன் தெரிவித்துள் ளார். (ம-7)

புத்தாண்டுக் கொண்டாட்டத்தில்

# யாழில் இளைஞன் மீது மிலேச்சத்தனமாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழில் வன்முறைக் கும்பல் ஒன்றினால் இளை ஞன் ஒருவர் மீது மிலேச் சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சம் பவம், நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இறுதிநாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்று வந்த நிலையிலேயே நக ர்ப் பகுதியில் அமைந்து ள்ள தனியார் பேருந்து தரிப்பு நிலையத்திற்கு முன் பாக தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதன்போது அந்தக் கும்பலைச் சேர்ந்த தரப் பினர் முச்சக்கர வண்டி யின் ஒரு சில்லினைத் தூக்கி ஆபத்தான முறை யில் வீதியின் குறுக்கு மறுக்காக வாகனத்தைச் செலுத்தியுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

அதன் பின்னர் குறித்த கும்பலால் வீதியில் நின்ற இளைஞன் ஒருவர் மீது, தலைக்கவசம், கையில் உள்ள பொருட்கள் என் பவற்றைப் பயன்படுத்தித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பிலான விசாரணை களைப் பொலிஸார் ஆரம் பித்துள்ளனர். (ம-7)

# 10 ஆயிரத்து 400 மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து முதற்கட்டமாக 10 ஆயி ரத்து 400 மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் 7 ஆம் திகதி இறக்குமதி செய்யப் படும். சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு எதிர் வரும் வாரத்துக்குள் தீர்வு எட்டப்படும் என அரச வாணிப கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவீந்திர பெர்னா ண்டோ தெரிவித்தார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டப்பாட்டுக்கு தீர் வாக இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

இதற்கமைய முதலாவ தாக விலைமனுக்கோரல் செய்யப்பட்ட 5200 மெற் றிக் தொன் அரிசி, நாட்டை வந்தடைந்துள்ளது. இதற் கமைய எதிர்வரும் 7 ஆம் திகதிக்குள் 10,400 மெற் றிக் தொன் அரிசி இறக்கு மதி செய்யப்படும். (ம-7)

# மக்கள் கோரிய ...

புதுவருடத்தில் நீதி மற்றும் ஒருமைப் பாடு அமைச்சின் கடமைகளை ஆரம் பிக்கும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை (01) நீதி அமைச்சு வளாகத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கை யில்,

பல வருடங்களாக மக்கள் எதிர்பார்த் திருந்த மாற்றம் ஏற்பட்டு தற்போது புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக் கிறது.

புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து புதிய அமைச்சரவை நியமிக் கப்பட்டது. புதிய பாராளுமன்ற உறுப் பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அரச சேவை புதிதாக நியமிக் கப்படவில்லை. என்றாலும் இந்த அரசாங் கத்தை அதிகாரத்துக்குக் கொண்டுவர அரச ஊழியர்கள் பாரியளவில் அர்ப்பணித் தார்கள். தபால் மூல வாக்குகளில் அது தெளிவாகியுள்ளது.

மேலும் சட்டத்தின் ஆட்சியை பாது காப்பதற்கு எமது அமைச்சுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது.

இந்த அமைச்சில் அமைச்சர், செய லாளர், மேலதிக செயலாளர் எனப் பல் வேறு பதவிகள் இருக்கின்றன. இவை அனைத்தும் உங்களுக்கு சாட்டப்பட்டிருக் கும் பொறுப்புக்களே அன்றி கிரீடம் அல்ல. அதனால் எங்கள் அனைவருக்கும் பொறுப் புக்கள் இருக்கின்றன.

அவை மாற்றமடைய முடியும். அணி யாக செயற்படும்போது அனைவரதும் பொறுப்புக்களும் முக்கியமாகும்.

அதனால் சிறந்த நோக்கத்துடன் முன் னுக்குச் செல்வதற்கு அனைவருக்கும் முடியுமாகட்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்றார். (ம-7)


விண்ணக வாழ்வில்
ஒன்பதாம் ஆண்டு

அன்னை மடியில் 24 - 09 - 1980



ஆண்டவன் மடியில் 02 - 01 - 2016

அமரர்
தீபா கெங்கேஸ்வரன்

எங்கள் அன்புக் குலவிளக்கே!
நீங்கள் விண்ணுலகில் கால்பதித்து
ஒன்பது ஆண்டுகள் சென்றபோதும்
எங்கள் இதயமெனும் கோவிலில்
இன்றும் வாழ்கின்றீர்கள்...

'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்'
என்றும் உனது நினைவுடன் வாழும்'

(C-1926)

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

உனது அன்பு அப்பா, அம்மா, கணவர்,
ஆசை மகள் சாலு மற்றும்



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி தமிழ்ப்பாட ஆசிரியை
திருமதி தேவகி சுதாகரன்
அவர்களின் பாசமிகு தாயார்



ஏரம்பமூர்த்தி
சரோஜினிதேவி

அவர்கள் 29.12.2024 (ஞாயிற்றுக்கிழமை)
அன்று காலமானார். அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-1928)

இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுப்பதே இலக்கு

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

**புதிய அரசியல் கலாசாரத்தின் ஆரம்பத்துடன்தான் இந்தப் புத்தாண்டு மலர்ந்துள்ளது. நாம் இந்த நாட்டை வளம் மிக்கதொரு நாடாக மாற்றியமைப்பதற்கான அடித்தளத்தை இட்டுள்ளோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



"க்ளீன் ஸ்ரீலங்கா" (தூய்மையான இலங்கை) தேசிய வேலைத் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்பது தான் எமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். பொருளாதாரமானது ஒரு தரப்பிடம் மட்டும் குவிந்து இருந்தால் ஒருபோதும் வறுமையை இல்லாதொழிக்க முடியாது.

இதனை ஒழிக்கும் வகையில் நாம் வரவு- செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.


இரண்டாவதாக நாட்டை டிஜிற்றல் மயமாக்க வேண்டும். மூன்றாவதான கீளின் ஸ்ரீலங்கா திட்டத்திற்கு அமைய அனைத்துத் துறைகளையும் தூய்மையாக்க வேண்டும்.

எமது நாட்டு சொத்துக்களையும் மக்களையும் பாதுகாப்பதே கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

விசேட தேவையுடையவர்களையும் ஒதுக்கி விட்டு பயணிக்க முடியாது. ஒரு தரப்பை ஒதுக்கிவிட்டு பயணிக்கும் ஒரு சமூகம் ஒரு போதும் வளர்ச்சியடைந்த சமூகமாக வளர்ச்சியடையாது.

மேலும் அரச சொத்துக்கள் இந்த தலைமுறைக்கு மட்டும் உரித்தானது கிடையாது. மாறாக இவற்றை பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் செயற்பாட்டையும் கிளின் ஸ்ரீலங்கா திட்டத்தில் உள்ளடக்கியுள்ளோம். என்று நாம் கேட்டுக் கொள்கிறோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (6)

# போலி கடவுச்சீட்டுடன் இருவர் கைது




(கொழும்பு)

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நேபாளம் ஊடாக இங்கிலாந்து செல்ல முற்பட்ட இலங்கையர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 39 வயதுடைய மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

சந்தேக நபர் நேபாளத்திற்குச் செல்லும் இந்திய விமான சேவையில் பயணிப்பதற்காக நேற்று விமான நிலையத்திற்கு வந்திருந்தார். ஆனால் குடிவரவு கருமபீடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குடிவரவு கருமபீட அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அந்த நபரை பரிசோதித்ததில், அவருடைய கடவுச் சீட்டு போலியானது என்றும், இதே போன்ற அம்சங்களைக் கொண்ட மற்றொரு நபரின் தகவலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கண்டறிந்தனர்.

மேலும் விசாரணையில் மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டார். (6)

# கடந்த ஆண்டு வருவாயில் இலங்கை சுங்கம் புதிய சாதனை




(கொழும்பு)

தமது வரலாற்றில் வருடமொன்றில் ஈட்டிய அதிகூடிய வருமானத்தை, 2024 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கம் பதிவு செய்துள்ளது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கம் 1.5 டிரில்லியன் ரூபாவினை வருமானமாக ஈட்டியுள்ளதாகச் சுங்க ஊடக பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கை, இறக்குமதியின் அளவு அதிகரிப்பு மற்றும் வரி வசூல் செயல்முறையைத் திறம்படச் செய்வதற்குச் சுங்க நிர்வாகம் மேற்கொண்ட மறுசீரமைப்புகள் என்பன இந்த வருவாயை ஈட்டுவதில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் வழங்கிய வரி வருவாய் இலக்குகளைப் பூர்த்தி செய்து நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு அதிகூடிய பங்களிப்பை வழங்க முடிந்தமைக்காக இலங்கை சுங்கம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் சுங்க ஊடக பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார். (6)

# மீனவர் விவகாரம்

## ஜனாதிபதியை சந்திப்பதற்கு கடற்றொழில் அமைப்புகள் திட்டம்

(கொழும்பு)

வட பகுதி மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ஜனவரி மாத இறுதியில் சந்தித்துப் பேசுவதற்கு கடற்றொழிலாளர் அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்திற்கும், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்திற்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் கடற்றொழில் அமைச்சால் முன்மொழியப்படவுள்ள புதிய சட்டமூலத்தை இடைநிறுத்தல், தமிழக அரசியல் தலைமைகளுடன் வடக்கு கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை முன்னெடுப்பதை வலியுறுத்தல், தேசிய மக்கள் சக்தியால் மீனவர் பிரச்சினை தொடர்பில் கோரப்பட்ட கால அவகாசம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைதல், 2025 ஆண்டில் வட மாகாண மீனவர்களின் வாழ்வியல் செயற்றிட்டங்கள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவை சந்திப்பதற்கான தீர்மானம் போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

அதேவேளையில் நாளை மறுதினம் சனிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரையும் இவ்வமைப்புகள் சந்தித்துப் பேசவுள்ளன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள்- 2025



**செவ்வாயை ராசிநாதனாகக் கொண்ட மேஷ இராசி அன்பர்களே!**

இந்த வருடத்தில் மனதில் தெளிவு பிறக்கும். அலைச்சல்கள் குறையும். தாமதமாக நடந்து கொண்டிருந்த செயல்கள் துரிதமாக நடக்கத் தொடங்கும். மனதை ஒருமுகப்படுத்தி உழைக்கத் தொடங்குவீர்கள்.

கும் மேலான உதவிகளைச் செய்வார்கள்.

**ஆரோக்கியம்:** உடல் ஆரோக்கியம் சிறப்படையும். அறுவை சிகிச்ஸ்சை செய்ய வேண்டிய சூழ்நிலைகளிலிருந்து தப்புவீர்கள். மனம் சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்தும் விலகும். மாற்று மருத்துவத்தின் மூலம் அனுகூலம் பெறுவீர்கள்.

**பெண்கள்:** பெண்களுக்குக் கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். பண வரவு சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக அமையும். ஆன்மிகச் சுற்றுலா சென்று வரும் ஆண்டாக இது அமையும். எங்கும், எப்போதும் பேசும் நேரத்தில்

சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். அதே சமயம் நண்பர்கள் போல் பழகும் எதிரிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும். பொதுவாகவே பிறரிடம் பேசும் போது நிதானம் தேவை.

எதிர்க்கட்சியினர் உங்களைப் பற்றிப் பரப்பும் அவதூறுகள் குறித்துக் கவலைப்பட வேண்டாம். மற்றபடி உங்களின் பணியாற்றும் திறன் கண்டு கட்சி மேலிடம் உங்களுக்குப் புதிய பதவிகளை அளிக்கும்.

**கலைத்துறையினர்:** பொறுப்புகள் கூடும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். அவற்றில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். பண வரவு

சற்றுக் கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி பயணம் செல்ல முடியாமல் தடங்கல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நன்மை தரும்.

**பரணி:** இந்த ஆண்டு எல்லாக் காரியங்களிலும் அதிக கவனம் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச் சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். குடும்பத்

## தாமதமாக நடந்து கொண்டிருந்த செயல்கள் துரிதமாக நடக்கத் தொடங்கும்

மற்றவர்களின் மனதைத் துல்லியமாக அறிந்துகொள்வீர்கள்.

குடும்பம்: குடும்பத்தில் நீண்ட நாட்களாக சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். குடும்பத்தினர் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். உங்களின் மனதை அழுத்திக் கொண்டிருந்த பல பிரச்சினைகள் விலகும். வம்பு, வழக்குகளில் ஓரளவு சாதகமான திருப்பங்கள் ஏற்படும்.

நீங்கள் பிடிவாதங்களைத் தளர்த்திக் கொண்டு அனைவரிடமும் ஒற்றுமையை வளர்த்துக் கொள்வீர்கள். உறவினர்கள் உங்களின் தன்மையை உணர்ந்துவிட்டுக் கொடுத்து போவார்கள். உங்கள் பேச்சில் கடமை உணர்ச்சி மிகுந்திருக்கும். நியாயவாதி என்று பெயரெடுப்பீர்கள். நட்பில் புதியவர்களின் தொடர்பு ஏற்படும்.

**பொருளாதாரம்:** வெளியில் கொடுத்திருந்த கடன்கள் திரும்பவும் உங்கள் கைக்கு வந்து சேரும். சில தடைகள் ஏற்பட்டாலும் உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றி வாகை சூடும். இந்த ஆண்டு உங்களின் கவலைகள் படிப்படியாகக் குறையும். புதிய வீட்டுக்குக் குடிபெயரும் வாய்ப்பு உண்டாகும். முன்னோர் சொத்துக்கள் உங்கள் கைக்கு வந்து சேரும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

நண்பர்கள் எதிர்பார்த்ததற்

நிதானம் தேவை.

**உத்தியோகத்தர்கள்:** அரசுத் துறைகளில் பணி செய்வோருக்கு அரசு மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இந்த ஆண்டில் பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் பேச்சுக்கு செவி சாய்ப்பார்கள். அலுவலகத்தில் உங்கள் மரியாதை உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அதே நேரம் எவரைப் பற்றியும் புறம் பேசாமல், சக ஊழியர்களின் நட்பைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

**வியாபாரிகள்:** வியாபாரிகள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாகவும் கோபப்படாமலும் நடந்துகொண்டால் நல்ல இலாபங்களை அள்ளலாம். மற்றபடி கடுமையான போட்டிகளையும் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் வெற்றிகரமாக முடிவடையும். கூட்டாளிகள் உங்களுக்குச் சாதகமாக நடந்து கொள்வார்கள். அதேசமயம் புதிய முதலீடுகளில் கவனமாக இருக்கவும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள், தொண்டர்களின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயர் வாங்குவீர்கள்.

அமோகமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். ரசிகர்களின் ஆதரவோடு வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யும் வாய்ப்புகளும் கிடைக்கும்.




**மாணவர்:** மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் வெற்றிக்கொடி நாட்டுவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். யோகா, பிராணாயாமம் போன்றவைகளைச் செய்து மனதை ஒரு நிலைப் படுத்துவீர்கள்.

**அசுவினி:** இந்த ஆண்டு காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. மனக்குழப்பம் நீங்கும்.

தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரி யங்களில் ஈடுபடுவீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப்பெறுவீர்கள்.

தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளைக் கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த ஆண்டு பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். அதனால் வெளியூர்ப் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது. கணவனின் உடல்நலத்தில் கவனம் தேவை.

உங்கள் புத்திக்கூர்மை உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். உங்களின் சமயோசித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள்.

**பரிகாரம் :** முருகன் கோவிலுக்கு ஏதேனும் ஒன்றுக்கு அடிக்கடி தரிசனம் செய்துவிட்டு வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வியாழன்

**அதிஷ்ட எண்:** 2

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை திருத்தம் கட்டண உயர்வுக்கு வழி வகுக்கும்

## இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

எரிபொருள் விலை திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானங்களினால் பேருந்து கட்டணத்தை குறைப்பது மக்களின் தொலைதூர கனவாக மாறியுள்ளது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தை தொடர்ந்து இந்த புத்தாண்டின் தொடக்கத்தில் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்த்தோம், ஆனால் அந்த நம்பிக்கை தற்போது கனவாக மாறியுள்ளது.

பேருந்து கட்டணம் குறைக்கப்பட வேண்டுமானால், ஒரு லீற்றர் டீசலின் விலையை குறைந்தது 30 ரூபாயாக குறைக்க வேண் டும்.

மேலும், எரிபொருள் விலை மட்டுமின்றி, உதிரிப் பாகங்கள் மற்றும் இதர உபகரணங்களின் விலையும் குறைய வேண்டும். தனியார் பேருந்து சேவை தற்போது நெருக்கடியான நிலையில் உள்ளது.

எனவே, செலவுகளை நிர்வாகிக்க இந்த ஆண்டு ஜூலை மாதத்திற்கு பின், பேருந்து கட்டணத்தை கணிசமாக உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்.

இது தவிர்க்க முடியாத காரணத்தினால் பேருந்து கட்டண உயர்வுக்கு வழி வகுக்கும் என்றும் அவர் கூறினார். (6)

# கச்சாய் வீதியில் பெருமளவான மணல் விஷமிகளால் அகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதி ஊரெல்லைத் தெருவில் நேற்று அதிகாலை வேளையில் இனந்தெரியாத குழுவினால் பெருமளவான மணல் அகழ்ந்து செல்லப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தை கடத்துவதற்காக அரச திணைக்களங்களால் வெட்டப்பட்ட வாய்க்கால் மணலே இவ்வாறு உழவியந்திரங்களில் அகழ்ந்து செல்லப்பட்டுள்ளது. சாவகச்சேரி-கச்சாய் வீதியில் உள்ள இராணுவ முகாம் மற்றும் அதனை அண்மித்துள்ள குடிமனைகளில் தேங்கி நின்ற வெள்ளத்தை கடத்துவதற்காக சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நகரசபையின் வீதியில் கடற்கரை வரை சுமார் 800மீற்றர் தூரம் ஜே.சி.பி வாகன உதவியுடன் வாய்க்கால் வெட்டி யிருந்தனர்.

இருப்பினும் தற்போது வெள்ள அனர்த்தம் கடந்து விட்ட போதிலும் வாய்க்கால் நிரவப்படாமையால் இரவு வேளைகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதுடன் மக்கள் போக்குவரத்துச் செய்யவும் சிரமப்படுகின்றனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் உரிய தரப்பினர் வாய்க்காலை மூட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-30)

# இலங்கையில் பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைவு

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்த பிறப்பு விகிதம் கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகச் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம் 350,000 இலிருந்து 250,000 ஆக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமின்றி புற்றுநோய், சர்க்கரை நோய் போன்ற நோய்களாலும் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தற்போதைய சூழ்நிலையில் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் விசேட வைத்தியர் தீபால் பெரேரா வலியுறுத்தினார். (6)

# எக்ஸ் தளத்தில் பெயரை மாற்றிய எலோன் மஸ்க்

(வோஷிங்டன்)

உலகின் முன்னணி பில்லியனரான எலோன் மஸ்க் சமூக ஊடக தளமான எக்ஸில் தனது பெயரை நேற்று முன்தினம் "கெகியஸ் மாக்சிமஸ்" என்று மாற்றியமைத்துள்ளதுடன் சுயவிவரப்படத்தையும் புதுப்பித்துள்ளார்.


உலகின் பிரபல சமூக வலைத்தளமாக இருந்த டுவிட்டரை இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்பேஸ் எக்ஸ் டெஸ்லா நிறுவனருமான எலோன் மஸ்க் விலைக்கு வாங்கினார்.

டுவிட்டரின் பெயரை எக்ஸ் [X] என்று மாற்றிய எலோன் மஸ்க் பல உயர்மட்ட ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து அந்த வலைத்தளத்தின் கட்டமைப்பிலேயே பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

இந்த நிலையில் அவர் தனது எக்ஸ் ஐடியின் பெயரை 'கெகியஸ் மாக்சிமஸ்' என்று மாற்றம் செய்துள்ளார்.

மேலும் தனது ஐடியின் முகப்பு படத்தையும் மாற்றி, பெபே தவளை மீமில் வரும் புகைப்படத்தை முகப்பு படமாக வைத்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு வெளியான கிளாடியேட்டர் திரைப்படத்தின் நாயகனின் பெயர் மாக்சிமஸ் ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கீர்த்தி விருது
## யோண்சன் ராஜ்குமாருக்கு



(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு தாமரைத்தடாக கலையரங்கில் அரச நாடக விழா நடைபெற்றது.

இந் நிகழ்வில் அரச உயர் விருதுகளில் ஒன்றான "நாடகக் கீர்த்தி" விருது யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரிய ஆலோசகர் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

குறித்த சாதனையைப் பாராட்டும் முகமாக நேற்றுப் புதன்கிழமை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.யமுனா ராஜசீலன் தலைமையில் ஆசிரிய ஆலோசகர் யோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. (க-8)

# படகில் ஏற்பட்ட கோளாறு
## நடுக்கடலில் பரிதவித்த மக்கள்
### நெடுந்தீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபடும் பயணிகள் படகொன்று நடுக்கடலில் இயந்திர கோளாறு காரணமாக தரை தட்டியதால் பட்கு சேதமடைந்துள்ளது. இதனால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவில் இருந்து நேற்று 11:30 மணிக்கு குறிகாட்டுவான் நோக்கி சேவையில் ஈடுபட்ட கரிகணன் பயணிகள் படகானது நடுக்கடலில் பயணித்த வேளை திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டு இயங்க மறுத்தது.

இதன்போது குறித்த படகில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், தென்பகுதி மக்கள் மற்றும் உள்ளூர் மக்கள் என அதிகமானோர் பயணித்த



நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த படகானது கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் கடலில் தத்தளித்த நிலையில், இதனை அவதானித்த நெடுந்தீவு மக்கள் தமது சிறிய மீன்பிடி படகுகளை கொண்டு சென்று பயணிகளை ஆபத்திலிருந்து விரைந்து மீட்டதுடன் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் படகின் உதவியுடன் குறித்த பயணிகள் படகானது கரைக்கு கொண்டுவரப்பட்டது.

அதேவேளை, குறித்த பகுதிக்கு நெடுந்தீவு பிரதேச செயலாளர் மற்றும் ஊழியர்களும் விரைந்து சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

இச் சம்பவத்தால் படகில் பயணித்த மக்கள் பதற்றமான நிலையினை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



வடக்கு மாகாண ஆளுநர் பலாலி விமானப்படைத்தளபதிக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. புத்தாண்டு வாழ்த்துக்களை இருவரும் பரிமாறிக்கொண்டதுடன், எதிர்காலத்தில் தொடர்ந்து சந்தித்துப் பேசுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(படம்- சிவசாந்தன்)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிக்கு
## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2025 ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிற்கான முழு நேரக் கற்கை நெறிகள் எதிர்வரும் 06.01.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித் துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனிபட வடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர் பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகை அலங்கரிப்பாளர், அழகுக் கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவுசேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர், போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகள் ஆகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 06.01.2025 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி. வீரசிங்கம் மண்டபம். இல 12, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது அனைத்துத் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினைப் பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். தொழிற் பயிற்சி அதிகார சபை பிரதி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

# இராசிபலன்

02.01.2025
மார்கழி 18,வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 2.49 மணிவரை

திருவோணம் பின்னிரவு 12.59 மணி வரை
சுப நேரம் 8.00-9.30 மணி வரை
இராகுகாலம் 2.00-3.30- மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்

வளவன்


மேஷம்

செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கடகம்

நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.


துலாம்


செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


மகரம்


ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் நன்மையுண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய காரியம் முடிவில் ஆதாயம் தரும், கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்


குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், பயணங்கள் கைகூடும்.


சிம்மம்


செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள்.


விருச்சிகம்


சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள்.


கும்பம்


சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.


மிதுனம்


எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை.


கன்னி

நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மனநிறைவு கூடும் நாள், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் கூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு.

தடைகளைக் கண்டு சோர்ந்துவிடாதே வெற்றிப் பயணம் தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்ட

## இளங்குமரன் எம்.பி

(சாவகச்சேரி)
யாழ். தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் 200 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு சுமார் மூன்று வருடங்களை அண்மிக்கும் நிலையில் எந்தவித பயனுமற்றுக் காணப்படும் விசேட பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைக்கும் நோக்கில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், பொருளாதார மத்திய நிலைய சந்தைக் கட்டடத் தொகுதி முன்னைய அரசாங்கத்தால் கட்டப்பட்டது.

இந் நிலையில் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் எமது கட்சிக் காரியாலயத்திற்கு எழுத்து மூலம் வந்த முறைப்பாட்டுக்கு அமைய, வந்ததாக தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் எமது அரசாங்கத்தில், இந்த பொருளாதார மத்திய நிலைய சந்தைக் கட்டடத்தொகுதியை எவ்வாறு இயக்குவது, மூலாபாயத்தை எவ்வாறு கையாள்வது என்பதைச் சிந்தித்து இந்த இடத்திற்கு ஏற்ற தொழில் துறையை எவ்வாறு செயற்படுத்துவது என கண்டிப்பாகத் தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார். (6)

# சில்ப அபிமானி

## தங்க விருதை சுவீகரித்த வடக்கு மாகாணம்



(யாழ்ப்பாணம்)
"சில்ப அபிமானி" - ஜனாதிபதி விருது தேசிய கைப்பணிப் போட்டியில் வெற்றிபெற்ற வடக்கு மாகாணக் கலைஞர்களை மதிப்பளிக்கும் நிகழ்வும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்திலிருந்து 119 ஆக்கங்கள் தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அதில் 29 பேர் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

முதற்தடவையாக தங்க விருது வடக்கு மாகாணத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் தேசிய ரீதியில் இரண்டு தங்க விருதுகளே வழங்கப்படும் நிலையில் அவற்றில் ஒன்றை வடக்கு மாகாணம் சுவீகரித்துள்ளது. இந்தக் கலைஞர்களைப் பாராட்டிய ஆளுநர், தொடர்ந்தும் அவர்கள் வடக்கு மாகாணத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும் கோரினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி செ.வனஜாவும் கலந்துகொண்டிருந்தார்.

உள்ளூர்க்கைப்பணிக்கலைஞர்களுடைய திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட

## 20 இந்திய மீனவர்கள் நாடு திரும்பினர்

(சென்னை)
இலங்கை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களும் விமானம் மூலம் நேற்று சென்னை வந்தடைந்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓராண்டுக்கு முன் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தமிழகத்தின் புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்திய-இலங்கை அரசாங்க அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 20 மீனவர்களும் விடுவிக்கப்பட்ட நிலையில், இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதையடுத்து அவர்களுக்கு தற்காலிக குடியுரிமை சான்றிதழ் வழங்கப்பட்டு, விமானம் மூலமாக கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>12 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, TO(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15049 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, MA, PHD, Lecturer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம்<br>தொ.இ: G/15076 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L, பாதுகாப்பு உத்தியோகத்தர் (bank)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ:B/15051 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>9 இல் சூரி செவ்<br>கி.பா: 14 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ: G/15078 |
| பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>11 இல் சூரி செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, Studio(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15053 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15082 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டுமே


# ரயர் விலையைக் குறைக்க உற்பத்தியாளர்கள் இணக்கம்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
உள்நாட்டு ரயர் ஒன்றின் விலையைக் குறைக்க உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் நேற்று முன்தினம் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இந்த இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியதாக அமைச்சர் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரயர்கள் இருந்த போதிலும் ரயர்களை இறக்குமதி செய்வதன் மூலம் பாரியளவில் அந்நிய செலாவணியை நாடு இழந்துள்ளதாக ரயர் உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எதிர்காலத்தில் தேவைக்கு அதிகமாக ரயர்கள் இறக்குமதி செய்யப்படுவதால் இறக்குமதி செய்யப்படும் டயர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்குமாறு உள்நாட்டு ரயர் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார் (6)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான 14 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கண்டி)
கண்டி, புஸ்ஸல்லாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடகம அடபாகே வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக சென்றிருந்த நோயாளர்கள் உட்பட 14 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புஸ்ஸல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.


வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மரமொன்றில் இருந்த குளவி கூடு ஒன்று கலைந்ததால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

10 நோயாளர்களும் 4 வைத்தியசாலைப் பணியாளர்களுமே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகியவர்கள் கம்பளை மற்றும் அடபாகே ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 11 பேர் சிகிச்சை பெற்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்வெளிக்கு பயணிக்கவுள்ள இஸ்ரோவின் 8 ரொக்கெட்டுகள்




**(டில்லி)**

**புதிய ஆண்டில் இஸ்ரோ நான்கு ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட்டுகள் மற்றும் மூன்று பி.எஸ்.எல்.வி ரொக்கெட் மற்றும் ஒரு எஸ்.எஸ்.எல்.வி. ரொக்கெட் ஏவுவதால் 2025ஆம் ஆண்டு மிகவும் உற்சாகமான ஆண்டாக இருக்கும் என இஸ்ரோ தலைவர் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து மத்திய விண்வெளித் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியதாவது, 2025 ஆம் ஆண்டு இஸ்ரோவிற்கு பிசியான மற்றும் முக்கியமான ஆண்டாக இருக்கும். முதல் 6 மாதத்தில் மட்டும் 6 ஏவுதல்கள் நடைபெற உள்ளன.

ரொக்கெட்டுகளை விண்ணில் ஏவ அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

ககன்யான் திட்டத்தின் இறுதிப் பயணத்திற்கு முன்னோடியாக பெண் ரோபோவை விண்வெளிக்கு அனுப்புவது உலகின் மிக விலையுயர்ந்த இந்தோ-அமெரிக்கா இணைந்து தயாரித்த நிசார் செயற்கைக் கோள் உள்ளிட்டவை விண்ணில் வெற்றிகரமாக ஏவ ஏற்பாடுகள் நடக்கிறது. என். வி.எஸ்., 2 செயற்கைக் கோள் ஜனவரியில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இது இஸ்ரோவின் 100 ஆவது ஏவுதல் ஆகும். (6)

## சாலை விபத்துக்களில் சிக்கி 18 பேர் பலி

### பாகிஸ்தானில் சம்பவம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து இஸ்லாமாபாத்தின் பகவால்பூர் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ், பதேஜங் என்ற பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். பெண்கள் உட்பட 22 பேர் படுகாயங்களுடன் பெனாசிர் பூட்டோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஒருவர் மட்டும் இஸ்லாமாபாத்தில் உள்ள தலைமை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதற்கிடையில் சிந்துவின் நவுஷாஹ்ரோ பெரோஸ் மாவட்டத்தில் மோரோ அருகே ஒரு லொரியும் வானும் நேருக்குநேர் மோதியதில் 8 பேர் இறந்தனர். மேலும் 13 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாகிஸ்தானில் நெடுஞ்சாலைகளில் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன.

இதற்கு முக்கிய காரணங்கள் அதிக வேகம், ஆபத்தான முறையில் வாகனங்களை முந்திச் செல்லுதல் மற்றும் போக்குவரத்து விதிகளை புறக்கணிப்பது போன்றவையாக உள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (6)

## பாகிஸ்தான் இராணுவத்தளம் தலிபான்கள் வசமானது

### இருநாடுகளுக்கும் இடையே போர் மூளும் அச்சம்



(இஸ்லாமாபாத்)

கைபர் பக்துன்க்வாவின் பஜௌர் மாவட்டத்தில் உள்ள சலர்சாய் பகுதியில் இருக்கும் பாகிஸ்தான் இராணுவத் தளத்தை தலிபான் கைப்பற்றி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தெஹ்ரீக்-இ-தலிபான்கள் படையினர் மூலம் பாகிஸ்தானின் இந்த இராணுவத் தளம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி காலை பாகிஸ்தானின் இராணுவத் தளத்தை குறிவைத்து தலிபான் படையினர் களமிறக்கப்பட்டதாகவும், அந்த தாக்குதலில் தலிபான் வென்றதாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

கைப்பற்றப்பட்ட இந்த இராணுவத் தளம் சிறிது காலத்திற்கு முன்பு அகற்றப்பட்டதாகவும் இங்கு இராணுவ வீரர்கள் யாரும் நிறுத்தப்படவில்லை என்றும் பாகிஸ்தான் சமாளித்து வருகிறது.

ஆனால் அங்கே பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் தாலிபான்களிடம் சரண் அடைந்த வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

தலிபான்களின் இந்த வெற்றி காரணமாக ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பல்வேறு இராணுவத் தளங்களை பாகிஸ்தான் அகற்றி வருவதாக கூறப்படுகிறது.

தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் 2007 இல் உருவாக்கப்பட்டது. பல்வேறு கடுமையான சன்னி இஸ்லாமிய குழுக்களின் அமைப்பாக இது உருவாக்கப்பட்டு வந்தது.

பாகிஸ்தானில் தனித்தனியாக செயற்பட்டு வந்த பழங்குடிப் போராளிக் குழுக்கள் எல்லாம் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கியது.

பாகிஸ்தான் உள்ளேயே தலிபான் ஆதரவு - எதிர்ப்பு குழுக்கள் உள்ளன.

கடந்த மார்ச் மாதம் ஏற்கனவே தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் மீண்டும். இப்போது வான் வெளித் தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு நாடுகளுக்கு இடையே போர் மூளும் அச்சம் எழுந்துள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# சீனா- தைவான் இணைவதை யாராலும் தடுக்க முடியாது

## சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவிப்பு

**(பீஜிங்)**

**சீனாவுடன் தைவான் ஒன்றிணைவதை யாராலும் தடுக்க முடியாது என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் புத்தாண்டுச் செய்தியாக சீன மக்களுக்குத் தெரிவித்துள்ளார்.**



கிழக்கு ஆசியாவில் தென் சீனக் கடல், கிழக்கு சீன கடல், பிலிப்பைன்ஸ் கடல் ஆகியவற்றுக்கு மத்தியில் இருக்கும் தீவான தைவான் நாட்டை சீனா உரிமை கொண்டாடி வருகிறது.

மேலும் தைவான் தனி நாடு அல்ல அது சீனாவின் ஒரு பகுதி என்று தொடர்ந்து சீனா சொல்லி வருகிறது.

இதற்கு தைவான் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில் திடீரென தைவான் தீவைச் சுற்றிலும் கடல் பகுதியில் சீன இராணுவம் போர் ஒத்திகையைத் தொடங்கியதுடன் விமானப்படை மற்றும் கடற்படை பயிற்சிகளை மேற்கொண்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில் புத்தாண்டையொட்டி சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தைவானில் உள்ள மக்களும் சீன மக்களும் ஒரே குடும்பம். எங்கள் இரத்த உறவுகளை யாராலும் துண்டிக்க முடியாது. எனவே தாய்நாட்டுடன் தைவான் மீண்டும் ஒன்றிணைவதற்கான வரலாற்றுப் போக்கை யாராலும் தடுக்க முடியாது என அவர் தெரிவித்தார். (6)

# எமிரேட்ஸ் விமான விபத்தில் இந்தியர் உட்பட இருவர் பலி



(அபுதாபி)

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இலகுரக விமானம் விபத்தில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டொக்டர் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இலகுரக விமானம் ஒன்று விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வைத்தியர் உட்பட விமானி மற்றும் துணை விமானி இருவரும் உயிரிழந்தனர்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த வைத்தியர் சுலைமான் அல் மஜித் இங்கிலாந்தில் உள்ள கவுண்டி டர்ஹாம் மற்றும் டார்லிங்டன் என் ஹெச்எஸ் அறக்கட்டளையில் வைத்தியராகப் பணி புரிந்து வந்தார்.

அவரது தந்தை, தாய் மற்றும் இளைய சகோதரர் ஆகியோருடன் விமானத்தில் பயணிக்கத் திட்டமிட்டு இருந்தார். குடும்பத்தினரை அழைத்துச் செல்வதற்கு முன்னதாக தான் மட்டும் ஒருமுறை பறந்து பார்க்க ஆசைப்பட்ட சுலைமான் விபத்தில் சிக்கினார். பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது குடும்பத்தினர் கண் முன்னிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

சுலைமானின் தந்தை கூறியதாவது, புத்தாண்டை ஒரு குடும்பமாக நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம், ஒன்றாகக் கொண்டாட திட்டமிட்டோம். மாறாக எங்கள் வாழ்வு சிதைந்து விட்டது. காலம் நமக்காக நின்று போனது போன்ற உணர்வு.

சுலைமான் எங்கள் வாழ்க்கையின் ஒளியாக இருந்தார். அவர் இல்லாமல் எப்படி முன்னேறுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. இவ்வாறு அவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார். (6)

# மரண தண்டனை இரத்து சட்டத்துக்கு ஒப்புதல்

## ஜிம்பாப்வே ஜனாதிபதி



(அராரே)

ஜிம்பாப்வேயில் உடன் அமுலாகும் வகையில் மரண தண்டனையை இரத்து செய்யும் சட்டத்துக்கு அந்த நாட்டு ஜனாதிபதி எம்மர்சன் (ம)னங்காக்வா ஒப்புதல் அளித்துள்ளார்.

மரண தண்டனையை ரத்து செய்வதை மனித உரிமை கண்காணிப்பு குழுக்கள் வரவேற்றுள்ள போதிலும் அவசர நிலையின் போது மரண தண்டனை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படலாம் என கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரண தண்டனையை நீக்குவதற்கான வாக்கெடுப்பு ஜிம்பாப்வே பாராளுமன்றில் அண்மையில் இடம்பெற்ற நிலையில் அந்த நாட்டு ஜனாதிபதி தமது ஒப்புதலை அளித்துள்ளார். ஜிம்பாப்வேயில் இறுதியாக 2005 ஆம் ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

எனினும் அதற்குப் பின்னர் கொலை போன்ற கடுமையான குற்றங்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகின்றன. இதற்கமைய சிம்பாப்வேயில் 2023ஆம் ஆண்டின் இறுதியில் 60 பேருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்ததாக அந்த நாட்டு அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பி மனுஷவுக்கு எதிராக முறைப்பாடு பதிவு

(கொழும்பு)

முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் சக்தி என்ற அமைப்பின் தலைவர் ஜாமுனி கமந்த துஷாரவினால் இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்கும் போது, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கையூட்டல் பெற்றிருக்கலாம் என்பதால் அவரது சொத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரி இந்த முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மனுஷ நாணயக்கார தற்போது வெளிநாடொன்றில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அவரை நாட்டுக்கு வரவழைத்து அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கையூட்டல் மற்றும் ஊழலுக்கு எதிரான மக்கள் சக்தி என்ற அமைப்பின் தலைவர் ஜாமுனி கமந்த துஷார தெரிவித்துள்ளார். (6)

# விமான சேவைகளை அதிகரிக்கும் எமிரேட்ஸ்

(கொழும்பு)

இலங்கைக்கான விமான சேவைகளை அதிகரிக்கவுள்ளதாக எமிரேட்ஸ் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

எமிரேட்ஸ் நிறுவனம் நாளாந்தம் இலங்கைக்கு 3 விமான சேவைகளை இயக்குவதுடன் அவற்றில் இரண்டு விமான சேவைகள் டுபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேரடியாகவும் ஒரு விமானச் சேவை மாலைத்தீவின் ஊடாகவும் இயக்கப்படுகின்றன.

இதன்படி இன்று முதல் வியாழக்கிழமைகளிலும் இலங்கைக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்படும் என எமிரேட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை வாராந்தம் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய 6 நாட்களும் இலங்கைக்கான விமான சேவை முன்னெடுக்கப்படும் என எமிரேட்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து வாரத்தின் 7 நாட்களும் இலங்கைக்கான விமான சேவைகளை இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எமிரேட்ஸ் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது. (6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 380 | 350 | 350-450 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 1000 | 1100 | 1000 | 1200-1300 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 400 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 150-180 | 200 |
| கோவா | 180 | 250 | 250 | 200 | 320 |
| கரட் | 350 | 300 | 250 | 250 | 400 |
| பூசணி | 130 | 200 | 200 | 180 | 250 |
| புடோல் | 160 | 300 | 150 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100-150 | 250 |
| [illegible]ன வெங்காயம் | 350 | 400 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 250 | 220 | 200 | 300 |
| பாகற்காய் | 600 | 700 | 1000 | 1000 | 1000 |
| வெண்டக்காய் | 160 | 300 | 150 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 150 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 200 | 350-400 | 300 |
| லீக்ஸ் | 400 | 380 | 280 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 450 | 400 | 300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 600 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 300 | 350 | 400 | 300-400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 60 | 200 | 150-200 | 200 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300-500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-190 | 180-200 |
| இராசவள்ளி | -- | 700 | 600 | 800 | 700 |
| வெங்காயப்பூ | 600 | 650 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 100 | 400 | 180-200 | 320 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | [illegible] | 200 |

# இன்று ஒரு தகவல் 293



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## பக்தி

ஒரு அரசன் காட்டுக்குப் போனான்.அங்கே ஒரு முனிவரைப் பார்த்தான். அவருக்கு ஏதாவது கொடுத்துவிட்டு வர வேண்டும் என்று ஆசைப்பட்டான். நேராக அவரிடம் போனான்.

சுவாமி! என்னிடமிருந்து நீங்கள் எதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டினான். அந்த முனிவர் இந்த ராஜாவை நிமிர்ந்து பார்த்தார்.

எனக்கு உன்னிடமிருந்து பெற வேண்டியது ஒன்றுமில்லை. எனக்கு என்ன தேவையோ அதெல்லாம் எனக்கு இங்கிருந்து கிடைக்கிறது. எனது பசிக்கு உணவு தேவை. இதோ இந்த மரங்களெல்லாம் அதற்காக பழங்களைக் கொடுக்கிறது.

என் தாகத்திற்குத் தண்ணீர் தேவை. அதைக் கொடுப்பதற்கு இந்த ஆறுகள் இருக்கிறது. இந்த மரங்கள் கொடுக்கின்ற பட்டைகளை நான் ஆடையாக அணிந்து கொள்வேன். இந்த மரங்கள் கொடுக்கின்ற நிழலில் தங்கிக் கொள்கிறேன். மழை வந்து விட்டது என்றால் இருக்கவே இருக்கு குகைகள். அங்கே போய் விடுகிறேன். அப்படி இருக்கும் போது உன்னிடமிருந்து நான் வாங்குவதற்கு என்ன இருக்கு என்றார் முனிவர்.

ராஜா விடவில்லை. இருந்தாலும் நீங்கள் என்னுடைய அரண்மனைக்கு வரவேண்டும் அங்கே வந்து நீங்கள் ஏதாவது வாங்கிக் கொண்டுதான் போக வேண்டும் என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

அவரும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு அவனுடன் புறப்பாட்டார்.அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அரண்மனையிலே அவரை ஒரு பக்கமாக உட்கார வைத்துவிட்டு அந்த அரசன் பூஜை அறைக்குள்ளே போனான். அங்கே இருந்த சுவாமிப் படங்களுக்கு முன்னால் நின்று பகவானே எனக்கு குழந்தை இல்லை. ஒரு குழந்தையைக் கொடு. எனக்கு இருக்கும் செல்வம் போதவில்லை. அதனால் இன்னும் செல்வத்தைக் கொடு. இப்போது இருக்கின்ற இராஜ்ஜியமும் எனக்கு போதாது. இதை இன்னும் பெரிதாக்கு என்று வேண்டிக் கொண்டிருந்தான்.

முனிவர் உடனே அந்த அரண்மனையை விட்டு புறப்பட்டு காட்டைப் பார்த்து நடக்க ஆரம்பித்தார். அரசன் அதைக் கவனித்துவிட்டு அவருக்கு பின்னாலே ஓடி வந்தான். என்ன இது? ஒன்றும் வாங்காமலேயே புறப்படுகின்றீர்களே என்றார்.

அதற்கு முனிவர் பிச்சைக்காரனிடமே பிச்சை வாங்கலாமா? என்று கேட்டார். யாரைச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டான் அரசன். உன்னைத் தான் சொல்லுகிறேன். இப்போது பகவானிடம் நீ பிச்சைதானே கேட்டுக் கொண்டிருந்தாய் என்றார் முனிவர்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். எதற்காக இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்?

அதையும் அவரே விபரமாகச் சொல்லுகிறார். கடவுளிடம் அன்பு காட்டுவது என்பது வேறு. அவரிடம் பிச்சை கேட்பது என்பது வேறு. அவர் மேல் உள்ள அன்பு காரணமாக அவரை வணங்க வேண்டும்.

ஒரு அழகான இயற்கைக் காட்சியைப் பார்க்கிறீர்கள். உடனே அதன்மீது ஒரு காதல் பிறக்கிறது. உடனே அந்தக் காட்சியிடமிருந்து நீங்கள் எதையாவது எதிர்பார்ப்பீர்களா?

அல்லது அதுதான் உங்களிடமிருந்து எதிர்பார்கின்றதா? அதைப் போல் தான் நாங்கள் கடவுளையும் நேசிக்க வேண்டும். எங்களால் அவரை நேசிக்காமல் இருக்க முடியாது என்ற நிலை வரவேண்டும். அதற்குத் தான் பக்தி என்னும் பெயர் என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் இப்போது உள்ள பல பக்திமான்கள் அப்படியா இருக்கிறார்கள்? எனக்கு அதைக் கொடு. இதைக் கொடு என்று கேட்டுக்கொண்டு கடவுள் சந்நிதியிலே கையேந்திக்கொண்டுதானே இருக்கிறார்கள்.

கடவுளே ஒரு தடவை நினைத்தார். பூமிக்கு வந்து இப்படி கையேந்திக் கொண்டு நிற்கின்ற பக்தன் ஒருவனுக்கு மனசு நிறைகின்ற மாதிரி எதையாவது கொடுத்துவிட்டுப் போக வேண்டும் என்று. அதற்காக இங்கே வந்தார். பக்தனைப் பார்த்தார்.

உனக்கு என்ன என்ன வேண்டும் என்றார். அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தார். அவன் வீட்டில் இருந்த மண் பானையைக் கடவுள் தன் ஆட்காட்டி விரலாலே தொட்டார். உடனே அது தங்கமாகிவிட்டது.

அவன் வீட்டில் இருந்த மர நாற்காலியைத் தொட்டார் அதுவும் தங்கமாகிவிட்டது. அவன் வீட்டைத் தொட்டார். அதுவும் தங்கமாகிவிட்டது. பக்தனுக்கு ரொம்ப சந்தோசம்.

கடவுள் பார்த்தார். அவனைப் பக்கத்திலே கூப்பிட்டு இன்னும் உனக்கு என்ன வேணும்? கேள் என்றார்.

இன்னும் ஒன்றே ஒன்று தான் எனக்குத் தேவை என்றான். என்ன வேணும் என்றார் கடவுள். உங்கள் ஆட்காட்டி விரல் என்றான் பக்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்

## செல்வம் எம்.பி தெரிவிப்பு



(மன்னார்)

நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டால் அநுர அரசாங்கம் பொருளாதார ரீதியில் அச்சப்பட வேண்டிய அவசியம் ஏற்படாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர்ந்துள்ள எம் உறவுகள், எம் நாட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம், இந்திய இலங்கை ஒப்பந்தம் இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், செயற்பாடுகள் அமைய வேண்டும்.

எனவே இந்த புதிய ஆண்டில் எமது மக்கள் அனைத்து விதமான வசதிகளுடனும் வாழக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயற்பட வேண்டும்.

அதற்காக நாங்களும் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறோம். இந்த வருடத்தில் பின்தங்கிய கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

# பொது விளையாட்டு மைதானம் முல்லையில் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் பி.ப 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வானது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜசிந்தன் தலைமையில் நடைபெற்றது.

உலக வங்கியின் 27.56 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளதுடன் பார்வையாளர்களை உள்ளடக்கிய புதிய கட்டடம் ஒன்றும் வடக்கு மாகாண ஆளுநரினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், உதைபந்தாட்ட வீரர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (8)



புதுவருடத்தினை முன்னிட்டு பொலிஸார் தமது கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்றைய தினம் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் காலை 8 மணிக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையில் இடம்பெற்றது. (படம்: சதீஸ்)

# வடமாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டமீறல் இரண்டரைக் கோடி ரூபா தண்டம்

(வவுனியா)

கடந்த 2024 ஆம் ஆண்டு வட மாகாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 3 ஆயிரத்து 499 வர்தகர்களிற்கு எதிராக 2 கோடியே 58 இலட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வட மாகாண உதவிப்பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்துள்ளார்.


குறிப்பாக வட மாகாணத்தில் 3 ஆயிரத்து 445 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 3 ஆயிரத்து 361 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 744 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 903 வர்த்தகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

946 வர்த்தகர்களிற்கு வவுனியா நீதிமன்றத்தின் ஊடாக 57 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8-250)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3286

### டிலானி

2025 இல் உன்னோட இலட்சியம் என்ன?



பெரிய இலட்சியம் இல்லை சேர்... மூன்று வேளை சோறு, கடன் இல்லாத வாழ்க்கை. அது போதும்

### மதுசன்

இந்த புது வருடத்தில் என்ன செய்யலாம்?



ரொம்பவெல்லாம் யோசிக்காதீங்கள் இந்த புதுவருடம் ஏற்கனவே நம்மை என்ன செய்யலாம் என்று யோசித்து வைத்திருக்கும்

### கார்த்தி

கணவன்: ஐ லவ் யூ டியர்...

மனைவி: ஐ லவ் யூ டூங்க..
உங்களுக்காக இந்த உலகத்தையே எதிர்த்து சண்டை போடுவேன்..

கணவன்: ஆனா, நீ தினமும் என் கூட தானே சண்டை போடற...!

மனைவி: ஏன்னா,
நீங்க தான் என் உலகமே...

### கஜா

புதுவருடம் பிறக்குது என்று சந்தோசப்படுகிறதா?




இல்லை ஒரு வயது கூடிப்போச்சு என்று வருத்தப்படுகிறதா... புரியவில்லையே

### பெனிற்றா

வருடம் ஆரம்பிக்கும் போது happy new year என்று பதிவு போட வேண்டியது




வருடம் முடியும் போது மோசமான வருடம் என்று திட்டி தீர்க்க வேண்டியது

### தீபன்

ஆண்கள் வாழ்க்கை என்பது பெண்கள் கையில் கிடைத்த ரவை மாதிரி



அதில் கேசரி செய்வதும் உப்புமா செய்வதும் அவர்கள் மனநிலையை பொறுத்து

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கல்கியின்

# பொன்னியின் செல்வன்

671

பாகம் -III





மற்றவர்கள் சற்று நேரம் வரை இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு திகைத்து நின்றார்கள். ரவிதாஸன் முதலில் திகைப்பு நீங்கப்பெற்றுக் கூறினான்.

"தேவி! சக்கரவர்த்தி நம்முடைய கோரிக்கையை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளாமல் தங்களிடம் வாளைக் கொடுத்து விட்டார். மறுபடியும் விளக்கமாகச் சொல்லி."

நந்தினி அவனைத் தடுத்து நிறுத்தினாள் தழுதழுத்த குரலில் கூறினாள். "இல்லை, ஐயா இல்லை! சக்கரவர்த்தி நன்றாய்ப் புரிந்து கொண்டுதான் வாளை என்னிடம் கொடுத்தார். என் கண்ணீரைப் பார்த்து நீங்கள் கலங்க வேண்டாம். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் படுகொலைக்குப் பழி வாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை நினைத்துக் களிப்பு மிகுதியினால் கண்ணீர் விடுகிறேன்!"

"தேவி! யோசித்துப் பாருங்கள்! நாங்கள், இத்தனை பேர் ஆபத்துதவிப் படையினர் உயிரோடிருக்கும்போது" என்று சோமன் சாம்பவன் தொடங்கியதை நந்தினி தடுத்து நிறுத்தினாள்.

"யோசிக்க வேண்டியதே இல்லை, அந்தப் பொறுப்பு என்னுடையதுதான். உங்களுக்கும் வேலையில்லாமற் போகவில்லை. உங்களில் பாதிப் பேர் சக்கரவர்த்தியைப் பத்திரமாகப் பஞ்ச பாண்டவர் மலைக்குக் கொண்டு போய்ச் சேருங்கள். மற்றவர்கள் கடம்பூருக்கு வாருங்கள். சம்புவரையன் மாளிகைக்குள் வரக்கூடியவர்கள் வாருங்கள் மற்றவர்கள் வெளியில் சித்தமாகக் காத்திருங்கள். வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளுடன் காத்திருங்கள். காரியம் வெற்றிகரமாக முடிந்த பின் கூடுமானால் எல்லாரும் உயிருடன் தப்பித்துச் செல்ல வேண்டும் அல்லவா?" என்றாள் நந்தினி.

ரவிதாஸன் முன் வந்து, "அம்மணி! ஒரு விடயம் சொல்ல மறந்து போய் விட்டது அதைச் சொல்ல அனுமதிக்க வேண்டும்" என்றான்.

"சொல்லுங்கள் ஐயா! சீக்கிரம் சொல்லுங்கள்! பழுவேட்டரையர் கொள்ளிடக் கரையில் நடக்கும் காலாமுகர்களின் மகா சங்கத்துக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வந்து விடுவதற்குள்ளே நான் அரண்மனை போய்ச் சேரவேண்டும்!" என்றாள் நந்தினி.

"நமது முதற் பகைவன் ஆதித்த கரிகாலன் கடம்பூர் சம்புவரையன் மாளிகைக்கு வந்து சேருவான் என்று சொன்னீர்கள் அல்லவா? அது அவ்வளவு நிச்சயமில்லை" என்றான். "எந்தக் காரணத்தைக் கொண்டு அவ்விதம் சொல்கிறீர்?"

"தகுந்த காரணத்தைக் கொண்டுதான் சொல்கிறேன் கடம்பூர் மாளிகைக்கு எக்காரணத்தைக் கொண்டும் வரவேண்டாம் என்று ஆதித்த கரிகாலனுக்கு ஓலை போகிறது. பழையாறை இளைய பிராட்டியும், முதன் மந்திரி அநிருத்தரும் அவ்விதம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்"

"அந்த விபரம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தீர்?" "தெரிந்திருந்தும் அவன் கடம்பூருக்கு வருவான் என்று எதிர்பார்க்கிறீர்களா?"

"ஆம் அவசியம் எதிர்பார்க்கிறேன். ஆதித்த கரிகாலருடைய இயல்பு அந்தப் பழையாறைப் பெண் பாம்புக்குத் தெரியாது. அன்பில் பிரம்மராட்சதனுக்கும் தெரியாது.

மாய மந்திர வித்தைகளில் தேர்ந்த உமக்கும் கூடத் தெரியவில்லை. எந்தக் காரியத்தையாவது செய்யவேண்டாம் என்று யாரேனும் தடுத்தால், அதைத்தான் ஆதித்த கரிகாலர் கட்டாயமாகச் செய்வார். அது எனக்குத் தெரியும் நிச்சயமாகத் தெரியும்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## கடலும் காற்றும்



காற்றரசன் வான மண்டலத்திலேயே வேகமாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது அவன் பார்வை நிலத்தின் பக்கம் திரும்பியது. பயிர்கள், செடி கொடிகளெல்லாம் வாடிக் கிடந்தன. மெல்லக் கீழே இறங்கி வந்தான்.

நீங்களெல்லாம் ஏன் வாடிக் கிடக்கிறீர்கள்? என்ன நேர்ந்தது?" என்றான் காற்றரசன்.

"அரசே. ஏரி குளமெல்லாம் நீர் வற்றிப் போய் விட்டன. எங்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால்தான் ஒரே வாட்டமாய் வதங்கிக் கிடக்கிறோம்" என்று அவை மறுமொழி கூறின.

அவற்றின் குரல் பரிதாபமாயிருந்தது! அவற்றின் நிலை ஒரே சோகக் காட்சியாயிருந்தது. "விரைவில் உங்கள் துன்பத்தைப் போக்குகிறேன்" என்று சொல்லிவிட்டுக் காற்றரசன் புறப்பட்டான்.

சிறிது தூரம் சென்றவுடன் கீழே ஒரு பெரிய நீர்ப்பரப்பைக் கண்டு இறங்கி வந்தான். கடலரசனைக் கண்டான்.

"நண்பா, உன்னிடம் நீர் நிறைய இருக்கிறதே ! சிறிது அளவு பயிர் பச்சைகளுக்குக் கொடுத்து உதவுகிறாயா" என்று காற்றரசன் கேட்டான். கடலரசன் சிரித்துக் கொண்டே வேண்டிய அளவு எடுத்துக் கொள் என்றான். காற்றரசன் சிறிது நீரை அள்ளினான். அள்ளிய வேகத்தில் கீழே கொட்டி விட்டான்.

ஒரே உப்பாயிருக்கிறதே ! என்றான். இதைக் கேட்ட கடலரசன் பெருஞ்சிரிப்புச் சிரித்தான். என்னிடமுள்ள நீர் குறையாமல் இருப்பதற்குத்தான் உப்பிட்டு வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் உன் மாதிரி ஆட்களுக்குப் போட்டே குறைந்து போய்விடும்" என்றான். பிச்சைக்கார கடலரசன் பேச்சு காற்றரசனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. சீற்றத்துடன் பாய்ந்து சென்று கதிரவனிடம் முறையிட்டான்.

தம்பி, பயப்ப டாதே! கடல் அரசனுக்குத் தெரியாமலே நான் கடல் நீரை உறிஞ்சி மேகமாக்கித் தருகிறேன். மேகங்களைத் தள்ளிக் கொண்டு போய் பயிர் பச்சைகளுக்கு மழையாகப் பொழியச் செய்து விடு. அவற்றின் வாட்டம் தீரும் ஏரி, குளங்களும் நிறையும்! தாமாகக் கொடுக்காதவர்கள் செல்வத்தை மறைமுகமாகத்தான் கவர்ந்து நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்றான் கதிரவன். கதிரவன் தான் சொன்ன வண்ணமே கடல் நீரை மேகமாக்கியது.

காற்று அம் மேகத்தைப் பயிர், செடி, கொடிகளுக்கும், ஏரி குளங்களுக் கும் மழையாகப் பொழியச் செய்தது. உலகம் செழித்தது!

கருத்துரை :- தாமாக உதவி செய்ய முன் வராதவர்களின் செல்வத்தை அவர்களும் மனம் நோகாமல் கவர்ந்து பிறர்க்கு உதவி செய்வது எல்லோருக் கும் நலம் பயக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை பிறந்தால் வழி பிறக்கும்.

– அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## கிரிபத் வழங்கும் பண்பாடு தமிழ் மக்களுக்குரியதல்ல

2025 புதிய வருடத்தின் ஆரம்ப வேலைகள் நேற்று அனைத்து அரச அமைப்புகளிலும் தொடங்கி வைக்கப்பட்டன.

தேசியக் கொடி ஏற்றுதல், உறுதிமொழி எடுத்தல் என்று நிகழ்வுகளினூடு புதிய வருடத்துக்கான வேலைகள் ஆரம்பமாகின.

உண்மையில் ஒவ்வொரு வருடத் தொடக்கத்திலும் அரச பணியாளர்கள் சத்தியப்பிரமாணம் எனும் உறுதிமொழியை எடுத்துக் கொள்வது ஒரு சிறந்த நடைமுறையாகும்.

இந்தியா போன்ற நாடுகளில் குறித்த உறுதிமொழிச் சத்தியப்பிரமாணம் பல சந்தர்ப்பங்களில் நடந்தாகின்றன.

இவ்வாறு உத்தியோகத்தர்கள் உறுதிமொழி எடுப்பதினூடு தங்களின் பணிகளைச் சிறப்பாக ஆற்றுவதை ஊக்குவிப்பதாக அமையும்.

அந்தவகையில் நேற்றைய தினம் அரச அலுவலகங்களில் அனைத்து அரச பணியாளர்களும் ஒன்றுகூடி; அந்தந்தத் திணைக்களத் தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, பணியாளர்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைத்தனர்.

இருந்தும் மேற்படி நிகழ்வுகளுடன் கிரிபத் எனும் பாற்சோறு வழங்குமாறு அரச சுற்றுநிருபத்தில் ஏலவே தெரிவிக்கப்பட்ட விடயம் தான் இங்கு சர்ச்சைக்கும் குழப்பத்துக்கும் வழிவகுக்கிறது.

அதாவது வருடத் தொடக்கத்தில் தேசியக் கொடி ஏற்றி உறுதிமொழி எடுத்தபின்பு பாற்சோறு வழங்குமாறு கூறப்பட்டதனால், தமிழர் பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள் பாற்சோறு வழங்குவதற்காகப் பெரும் பாடுபட வேண்டியதாயிற்று.

அதாவது முக்கிய விழாக்கள், பண்டிகைகளின்போது பாற்சோறு வழங்குகின்ற நடைமுறை சிங்கள மக்களின் பண்பாடு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சர்க்கரைப் பொங்கலை வழங்குகின்ற பண்பாட்டை உடையவர்கள்.

இங்குதான் பாற்சோறு செய்வதில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச திணைக்களங்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன.

எனவே எந்த நிகழ்வாக இருந்தாலும் சிங்கள மக்கள் தங்களின் பண்பாட்டுக்கும் நடைமுறைக்குமான சிற்றுண்டிகளையும் உணவுகளையும் பரிமாறும்போது, தமிழ் மக்கள் தங்களின் பண்பாட்டுக்கு அமைவாக சிற்றுண்டி வகைகளை வழங்குவதான ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

இங்குதான் சுற்றுநிருபங்களைத் தயாரிக்கும்போது இன சமத்துவம் பற்றிய அவதானிப்புகள் மிகவும் அவசியமாகின்றன.

ஆம், அண்மையில் யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு நடந்த சிங்கள மொழிப்பயிற்சிவகுப்பின் நிறைவில், அனைத்துத் தமிழ் பெண் உத்தியோகத்தர்களும் சிங்களப் பெண்கள் போல சாறி அணியுமாறும் அனைத்துத் தமிழ் ஆண் உத்தியோகத்தர்களையும் சிங்கள ஆண்கள் போல சாரம் சேட் அணியுமாறும் சம்பந்தப்பட்ட சிங்களப் போதனாசிரியர் கட்டளையிட்ட சம்பவம் அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் கடும் பேசுபடு பொருளாகியிருந்தது.

ஆக, தேவையில்லாத திணிப்புகளை மேற்கொண்டு, அமைதியாக இருக்கின்ற சூழலை எவரும் குழப்பாமல் பார்த்துக் கொள்வதும் அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் பொருளாதாரச் சிக்கலுக்கு தீர்வு கிட்டும்

## அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி எடுத்துரைப்பு

*(யாழ்ப்பாணம்)*

கிளீன் ஸ்ரீலங்கா போன்று நாட்டில் 80 ஆண்டு காலமாக புரையோடியுள்ள இனப்பிரச்சினையை இதய சுத்தியோடு இந்த அரசாங்கம் கிளீன் செய்து தமிழர்கள் சுதந்திரமாக வாழ பொலிஸ், காணி அதிகாரங்களுடன் சுயாட்சிக்கு வழிவிட்டால் நாட்டின் பொருளாதாரச் சிக்கல் இலகுவில் தீரும் எனத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், மலர்ந்திருக்கும் புதுவருடம் இன ஒற்றுமையுடன் கூடிய இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் அநுர அரசின் இலக்கை அடையும் புதுவருடமாக அமையும் என்ற எதிர்பார்ப்போடு காலடி எடுத்து வைக்கின்றோம்.

இலங்கை நாட்டில் வருமானம் தரக்கூடிய பொருளாதாரம் எவையும் இல்லை. பெருந்தோட்டப் பொருளாதாரமும் இல்லை. சுற்றுலாப் பயணிகளின் வருகையை மட்டும் தான் பார்த்திருக்கிறார்கள்.

இலங்கை உலக நாடுகள் மற்றும் நாணய நிதியத்திடம் வாங்கிய கடனை கட்டுவதென்றால் உடனடி வழிமுறை கூட இல்லை. நெல் உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் கைத்தொழிற்துறையும் எதிர்பார்த்த இலாபத்தை அடையவில்லை. இலங்கை அரசாங்கம் கிளீன் ஸ்ரீலங்கா போன்று புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கும் கிளீன் திட்டத்தைக் கொண்டு வருவார்களாக இருந்தால் உலகத் தமிழர்களின் நிதியுடன் வடக்குக் கிழக்கில் புதிய அபிவிருத்தியை உருவாக்கத் தயார்.

ஆனால் இலங்கையின் பொருளாதாரத்திலும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய வடக்கிலுள்ள பல தொழிற்சாலைகள் இன்னும் இயங்க முடியாதுள்ளது. இவற்றை இயக்குவதற்கான பண பலத்தை உலகத்தமிழர்கள் கொண்டுள்ளனர்.

என்னதான் இருந்தாலும் 80 ஆண்டுகளாகவுள்ள இனப்பிரச்சினைக்கு இதய சுத்தியுடன் ஒரு தீர்வைக் காண்பார்களாயின் அதிலும், இந்த அரசு இதைக் காணுமாயின் அது ஒரு புதிய மாற்றத்தை இலங்கைக்குக் கொடுக்கும்.

பொலிஸ், காணி அதிகாரங்களைத் தந்து நாங்கள் சுயாட்சியாக வாழ வழிவிடவேண்டும். எப்பொழுதும் சமாதானமாக பேசுவதற்கு எங்களுடைய சமாதானக் கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கும் எனத் தெரிவித்தார். (ம-7)

# கடற்படையைத் தாக்கிய இந்திய மீனவர்களுக்குத் தொடர் மறியல்

## குற்றப் பத்திரம் தாக்கல் செய்யவும் பணிப்பு

*(பருத்தித்துறை)*

வடமராட்சி கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதோடு கடற்படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதாகிய இந்திய மீனவர்களின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் மீண்டும் நீடித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இழுவைப் படகில் தடை செய்யப்பட்ட இழுவை மடியைப் பயன்படுத்தி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட போது கடந்த வருடம் நவம்பர் 11ம் திகதி வடமராட்சி கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் காரைக்கால் மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டு நவம்பர் 13ம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் நீரியல்வளத்துறை அதிகாரிகளினால் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த கைதின் போது கடற்படை அதிகாரிகளைத் தாக்கி கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் படகிற்கு சேதம் ஏற்படுத்தியிருந்தமை தொடர்பில் கடற்படையினரால், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் தொடரப்பட்ட வழக்கில் கடந்த நவம்பர் 27ம் திகதி 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனாலும் கடற்படையினரைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கில் மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கு நேற்றுப் புதன்கிழமை (01) பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆகவே இந்திய மீனவர்கள் மீதான குற்றப்பத்திரத்தினை தாக்கல் செய்யுமாறு நீதவான் பருத்தித்துறை பொலிஸாருக்குக் கட்டளையிட்டதுடன் மீனவர்களை எதிர்வரும் எட்டாம்(8) திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் உத்தரவிட்டார். (ம-7,60)

# புத்தாண்டில் எகிறுகிறது பேருந்துக் கட்டணம்

*(கொழும்பு)*

எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் பஸ் கட்டணம் நிச்சயமாக அதிகரிக்கப்படும் எனத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றிய தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன,

எரிபொருளின் விலை குறைக்கப்பட்டால் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு எரிபொருளின் விலை மாத்திரமன்றி ஏனைய உதிரிப்பாகங்கள் மற்றும் பொருட்களின் விலைகளையும் குறைக்க வேண்டும்.

இந்த ஆண்டு மத்தியில் பேருந்துக் கட்டணத்தை கண்டிப்பாகத் திருத்த வேண்டும். ஏன் என்றால் பேருந்தின் செலவீனம் அதிகரித்துள்ளது. எரிபொருளின் விலை குறைக்கப்படும் என நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஆனால் குறிப்பாக குறைந்தது, முப்பது மடங்கு குறைக்க வேண்டும். நாங்கள் இப்போது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

அதிக அளவில் குறைக்கப்பட்டால், அந்த பலனை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம-7)

## மஹிந்தவைக் கண்டஞ்சும் அநுர அரசு அவரை வீட்டுடன் முடக்க முஸ்தீபு

சாடுகிறார் சாகர

*(கொழும்பு)*

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசியலில் இருந்து ஓய்வு பெற வைப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது.

ஏனெனில் மஹிந்தவுக்கு ஆட்சியாளர்கள் அஞ்சுகின்றனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது இந்த நாட்டில் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ, அவருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்காமல், அவரை வீட்டுக்குள்ளேயே முடக்கி, அரசியலிலிருந்து ஓய்வு பெற வைப்பதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மஹிந்தவைக் கண்டு தற்போதைய அரசு அஞ்சுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு போதாது என அவரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையிலும் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. நாட்டை மீட்ட தலைவரை நாம் நிச்சயம் பாதுகாப்போம். புலிகளை ஒழித்த தலைவருக்கும், புலிகளுடன் பேச்சு நடத்தியவர்களுக்கும் ஒரே அளவான பாதுகாப்பை வழங்குவது நியாயமா? என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி – I

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1924 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கிராமிய பிரஜைகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் (Village Communities Ordinance No. 09 of 1924) மூலம் கிராமத் தலைவரின் பிரிவு அல்லது ஒரு பகுதியை கிராம சபைப் (Village Councils) பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படுவதற்கான அதிகாரம் ஆளுநருக்கும் குறித்த சபைக்கும் வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் கிராம சபைப் பிரிவில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களோ உள்ளடங்கும் வகையில் உப பிரிவுகள் அமைக்கப்படுவதன் மூலமும் அப் பிரிவுகள் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படுவதன் மூலமும் கிராமிய செயற்குழுக்கள் நிறுவப்பட்டன. இச் சட்டத்தின் மூலம் 1928 ஆம் ஆண்டில் 657 கிராமிய செயற்குழுக்கள் நிறுவப்பட்டன.

டொனமூர் ஆணைக்குழு உள்ளூர் அதிகார சபைகளின் அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுதல், புதிய அதிகாரசபைகளை நிறுவுதல், இருக்கும் அதிகார சபைகளை மறுசீரமைத்தல் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல பரிந்துரைகளை சிபாரிசு செய்தது. இதன் பிரகாரம் நகர சபைகள் மற்றும் பட்டின சபைகள் உருவாக்கப்பட்டன.

1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் (The Urban Councils Ordinance No. 61 of 1939) நாட்டின் மிகப் பெரிய நகரங்களில் நகர சபைகள் உருவாகியது. 27 நகர சபைகள் உருவாக்கப்பட்டன. அச் சபைகளின் உறுப்பினர்கள் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

1946 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் (The Town Councils Ordinance No. 3 of 1946) சிறு நகரங்களுக்கான பட்டின சபைகளை உருவாக்கியது. அந்த நேரத்தில் அதுவரை இருந்த உள்ளூர் சுகாதாரம் மற்றும் சுகாதார சபைகள் (Local Health and Sanitation Boards) மற்றும் சுகாதாரம் பேனல் சபைகள் (Sanitary Boards) இல்லாது ஒழிக்கப்பட்டு 24 பட்டின சபைகள் உருவாக்கப்பட்டன.

பட்டின சபைகள் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டதோடு அவற்றிடம் உள்ளூர் சேவைகள், பொது சுகாதாரம், பொதுவான வசதிகள், பௌதீக திட்டமிடல் மற்றும் வருவாய் வசூல் போன்றவை வழங்கப்பட்டன.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது உள்ளூர் அதிகார சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் (Village Councils) / கிராமிய செயற்குழுக்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

1952ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம் (The Local Authorities Enlargement of Powers Act No. 8 of 1952) மத்திய அரசிடமிருந்து சில அதிகாரங்களை உள்ளூர் அதிகாரசபைகளுக்கு மாற்றியதுடன், நகர சபைகளுக்கும் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

சுதந்திரத்திற்குப் பிறகு முப்பது ஆண்டுகளில் உள்ளூர் அதிகார சபைகள் அதிக அதிகாரங்களைப் பெற்றன. மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 40 திருத்தங்களும், நகர சபைக் கட்டளைச் சட்டத்தில் 44 திருத்தங்களும், பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தில் 23 திருத்தங்களும், 1924 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கிராமிய பிரஜைகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் (Village Communities Ordinance No. 09 of 1924) (அல்லது கிராமச் சபைச் சட்டம்) 49 திருத்தங்களும் செய்யப்பட்டன.

பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் ஆகியவற்றின் செயலாற்றுகையைப் பரிசீலிப்பதற்காகவும் அவை நிறுவனங்களாக்குவதற்கான வரையறுப்புக்களைப் பிரேரிப்பதற்காகவும் 1978இல் அமைச்சரவை ஒரு குழுவை நியமித்தமை உள்ளூராட்சி மறுசீரமைப்பின் முக்கிய நிகழ்வொன்றாகும்.

திரு. ஜி. மொறகொடவின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, 83 பட்டின சபைகள் மற்றும் 549 கிராம சபைகள் ஆகியவற்றிற்குப் பதிலாக உப அரசாங்கப் பிரிவு அடிப்படையில் 269 பிராந்திய சபைகளை (Regional Council) நிறுவும்படி சிபாரிசு செய்ததெனினும் இம் முன்மொழிவு அமுல்படுத்தப்படவில்லை.

1979 ஆம் ஆண்டு தென்னகோன் ஆணைக்குழு அப்போதைய மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளை (District Development Councils) நிறுவப் பரிந்துரைத்தது.

1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட சபைகள் சட்டம் (District Councils Act No. 35 of 1980) பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 24 மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டன. மாவட்ட அபிவிருத்தி சபைகளின் உறுப்பினர்களாக மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இருந்தனர்.

இதைவிட பாராளுமன்ற உறுப்பினர்களில் மாவட்ட அமைச்சர்களும் உருவாக்கப்பட்டனர். இதற்கு மேலாக பட்டினசபைகள் மற்றும் கிராமக் குழுக்களை இல்லாது ஒழிப்பதற்கும் அவற்றின் செயற்பாடுகளை புதிய மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு மாற்றுவதற்கும் சட்டம் இயற்றப்பட்டது.

பட்டினசபைகள் மற்றும் கிராமக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையைத் தென்னகூன் ஆணைக்குழு எதிர்த்தது. 24 மாவட்ட அபிவிருத்தி சபைகள் 1981 ஜூலை 1 முதல் செயற்படத் தொடங்கின. அதே நேரத்தில் 83 பட்டினசபைகள் மற்றும் 549 கிராமக் குழுக்கள் (அல்லது கிராமச் சபைகள்) இல்லாது ஒழிக்கப்பட்டன.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இயங்கவில்லை. இதனால் உள்ளூர் அரசாங்கத்தின் (local government) புதிய வடிவம் நாட்டுக்கு தேவைப்பட்டது.

வனசிங்க குழு மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஒழிக்கப்பட்டு பிரதேச சபைகள் (Divisional Councils) உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. பாராளுமன்றம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் திகதி பிரதேச சபைச் சட்டத்தை (Pradeshiya Sabha Act No. 15 of 1987) 15 ஏப்ரல் 1987 அன்று நிறைவேற்றியது.

1987 ஆம் ஆண்டின் 20 மற்றும் 24 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகள் (திருத்த) சட்டம் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் முறையை விகிதாசார முறைக்கு மாற்றியமைத்தது. 1 ஜனவரி 1988 இல் 257 பிரதேச சபைகள் செயற்படத் தொடங்கின.

அரசியலமைப்பின் 13ஆ திருத்தம் உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டையும் மேற்பார்வையையும் மத்திய அரசிடமிருந்து புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு மாற்றியது.

இருப்பினும் உள்ளூராட்சி சபைகளின் வடிவம், கட்டமைப்பு மற்றும் தேசிய கொள்கை தொடர்பான அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்கின்றன. அதாவது மத்திய அரசால் மட்டுமே புதிய உள்ளூராட்சி சபைகளை உருவாக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும், கலைக்கவும், மற்றும் தேர்தலை நடத்தவும் முடியும்.

2020ஆம் ஆண்டின் தகவலின்படி இலங்கையில் 24 மாநகர சபைகளும் 41 நகர சபைகளும் 276 பிரதேச சபைகளும் காணப்பட்டன. 1988-2000ஆம் ஆண்டுக் கால இடைவெளியில் சில பிரதேச சபைகள் நகர சபைகளாகவோ மாநகர சபைகளாகவோ தரமுயர்த்தப்பட்டன. இச் சபைகளுக்கு உரிய அங்கத்தவர்கள் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

இதில் மாநகரசபையின் தலைவர் மேயர் என்றும் நகரசபையின் தலைவர் நகரசபை தலைவர் அல்லது நகரபிதாவென்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் தவிசாளர் என்றும் விளிக்கப்படுகிறார்கள். தற்போது உறுப்பினர்கள் கலப்புத் தேர்தல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கலப்புத் தேர்தல் முறை பற்றி பின்னர் பார்ப்போம்.

2023 ஆம் ஆண்டில் ஐந்து நகரசபைகள் மாநகர சபைகளாகத் தரமுயர்த்தப்பட்டன. அவையாவன களுத்துறை நகர சபை, வவுனியா நகரசபை, புத்தளம் நகரசபை, கேகாலை நகர சபை மற்றும் திருகோணமலை நகர சபை ஆகும்.

வவுனியா நகரசபை, புத்தளம் நகரசபை, கேகாலை நகர சபை ஆகியவற்றின் எல்லைகளில் எவ்வித மாற்றமும் இன்றி தரமுயர்த்தப்பட்டன.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைபேசி...

தப்பட்டுள்ள சிசிரிவி காட்சிகளின் அடிப்படையில் 20 வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிக்கத்தக்க கைபேசி மற்றும் ஸ்மார்ட் கைக்கடிகாரம் என்பன களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ம-7)

## 7,264...

எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் மது போதையில் வாகனம் செலுத்திய 529 சாரதிகளுக்கும், கவனக்குறைவாகவும் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய 57 சாரதிகளுக்கும், அதிவேகமாக வாகனம் செலுத்திய 54 சாரதிகளுக்கும், போக்குவரத்து விதிகளை மீறிய 1,057 சாரதிகளுக்கும், உரிமத்தை மீறிய 614 சாரதிகளுக்கும் ஏனைய போக்குவரத்து விதிகளை மீறிய 4,953 சாரதிகளுக்கு எதிராகவும் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கடந்த மாதம் 23ஆம் திகதி முதல் இந்த விசேட போக்குவரத்து நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கற்றல் செயற்...

களினதும் மூன்றாம் தவணை எதிர்வரும் 24 ஆம் திகதி நிறைவடையும் என அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வருடத்திற்கான முதலாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.(ம-7)

## வவுனியா...

குறித்த நபர் கடந்த 25ஆம் திகதி நண்பர் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இதில் படுகாயம் அடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7)

## குறுகிய...

கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக நேற்றுப் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர்,

குறுகிய பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய பணிக்கு ஆயத்தமாக வேண்டும். வெளிப்படைத்தன்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக்கூறக்கூடிய உன்னத சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் தலைவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் ஒன்றிணைந்து இதனை ஒரு பொறுப்பாகவும் கடமையாகவும் கருத வேண்டும் என்றார். (ம-7)

## மக்கள்...

அதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்திற்கு இணைவாக பிரதமர் அலுவலகத்தில் கடமைகளை ஆரம்பித்தபோதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். (ம-7)

## நெல்லுக்கு...

வடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்திற்குள் அதனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த பெரும்போகம் ஆரம்பமாவதற்கு முன்னர் உரமானியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயம் மற்றும் கால்நடை வளத்துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (ம-7)

## உற்பத்திப்...

வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

புதுவருடத்தில் அமைச்சின் கடமைகளை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எமது நாடு பொருளாதார ரீதியில் கஷ்ட நிலைமையில் இருக்கிறது. வரலாற்று ரீதியில் எமது கொள்கையில் இருந்து வந்த குறைபாடுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் வீழ்ந்த இடத்தில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்ப நாங்கள் உறுதிபூணவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் கனவு எம்மனைவரிடமும் இருக்க வேண்டும்.

நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதாக இருந்தால் அதற்கான ஸ்திரமான முறைதான் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை நாட்டுக்குள் ஏற்படுத்துவதாகும்.

நாங்கள் இன, மத, அரசியல் ரீதியில் வேறுபட்டு இருந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் ஒரு குடும்பமாக செயற்பட்ட வேண்டும். ஒரு குடும்பமாக செயற்படும்போது குடும்பத்தின் அபிவிருத்திக்காக ஒரு சில தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்படுகிறது என்றார். (ம-7)

## கடந்...

வழங்கியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆகவே கடந்த கால அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம்முறையாக நிறைவேற்ற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ராஜபக்ஷர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளைக் குறைப்பதால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியுமென்று அரசாங்கம் கருதினால் அதற்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் இந்த ஆண்டு நிறைவேற்ற வேண்டும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார கைது



(கொழும்பு)

சமூக செயற்பாட்டாளரான நாமல் குமார கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (CID) அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பரவி வரும் குரல் பதிவு தொடர்பாக நாமல் குமார கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

**புலமைப்பரிசில் பரீட்சை**

# சர்ச்சைக்குரிய வினாக்களுக்கு புள்ளி வழங்கத் தீர்மானம்

புலமைப்பரிசில் பரீட்சையின் சர்ச்சைக்குரிய மூன்று வினாக்களுக்கும் பொதுவான புள்ளி வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையின் மூன்று வினாக்கள் முன்கூட்டியே வெளியாகியிருந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதன் காரணமாக தங்கள் பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர்.


குறித்த சம்பவம் அநீதமானது என்று குறிப்பிட்டிருந்த உயர் நீதிமன்றம், வழக்கின் தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கியிருந்தது.

அதன் பிரகாரம் சம்பவம் தொடர்பில் பொறுப்பு[illegible] வேண்டிய தேசிய கல்வி[illegible] வகத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் ஆகியோர் அரசாங்கத்துக்கு நட்டஈடு வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன், சம்பவம் குறித்து நிபுணர் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளில் பொருத்தமான ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் உத்தரவிடப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் சர்ச்சைக்குரிய மூன்று வினாக்களுக்கும் சகல பரீட்சார்த்திகளுக்கும் பொதுவான புள்ளிகள் வழங்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



சைவபரிபாலன சபையின்
ஆயுள்கால உறுப்பினரும்,
உப தலைவருமாகிய

**திரு. செல்லையா ஜெயபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(700)

நிர்வாகம், சைவபரிபாலன சபை,
இல.66 கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.



## வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் Pharmacy Licence. Pharmacist மற்றும் Assistant Pharmacist தேவை.

தொடர்புகளுக்கு

077 907 5753
076 707 5272

(699)


# பொலிஸின் புதிய செயலி அறிமுகம்

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து, இலங்கை பொலிஸினால் e-Traffic என்ற கையடக்கத் தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் வைத்துப் பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவினால் இந்த செயலி நேற்று அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த செயலி மூலம் பொது மக்கள், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து உடனடியாக முறைப்பாடு தெரிவிக்கலாம்.

இலங்கைபொலிஸின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.police.lk ஊடாக E-servicesக்குள் பிரவேசிப்பதன் மூலம் e-Traffic கையடக்கத் தொலைபேசி செயலியை உங்கள் கையடக்கத் தொலைபேசியில் இலகுவாகப் பதிவிறக்கம் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் ஊடாக உங்களது முறைப்பாடுகளை உடனடியாக பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1929)



## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.

(501)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

48/= ~~80/=~~

077 773 0900



## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD — VICTORY MUST

கணித விஞ்ஞானப் பிரிவுகள்
2025 Revision Classes
Tamil & English Medium.

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| PHYSICS | :- R.Kumaran. |
| | R.Kugen. |
| CHEMISTRY | :- Dias |
| | K.T.Shivakumar |
| BIOLOGY | :- N.T.Gajenthiran. |
| COM.MATHS | :- V.Khariharan |

ஆரம்பம் :- 05.01.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- 09.30 am

அனுமதிகள் 02.01.2025 இன்று முதல் வழங்கப்படுகின்றன.

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

(G-1927)

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு:

021 221 6690, 077 336 4030, 075 836 4055



## மணப்பெண் தேவை

- சாவகச்சேரி, இந்து, 1990, திருவோணம், BBM, B.Eng, Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வல்வெட்டி, இந்து, 1983, மூலம், Electrical Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மூளாய் - பலாலி, இந்து, 1983, உத்திராடம், A/L, France மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இந்து, 1992, அவிட்டம், BSc UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- உடுப்பிட்டி, இந்து, 1990, அவிட்டம், BSc Engineering, New zealand Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அளவெட்டி, இந்து, 1984, BSc Engineering, UK Citizen திருவோணம், மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அச்சுவேலி, இந்து, 1986, அனுசம், Administrative Professional, France Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கந்தர்மடம், இந்து, 1989, உத்திராடம், MSc, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(2891)

எம்மிடம் எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

www.thaalee.com
Astrologer
திருமண சேவை

- 077 539 3728
- 077 803 8193



## ICT புதிய பிரிவுகள் ஆரம்பம் திரு.இ.குமரன் -B.Sc

Gr. 6,7,8,9,10,OL

Branch I : 74, சபாபதி வீதி, தலையாழி, பிரம்படி
Branch II : கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி

Computer Lab
Study Guide
Examination
Past Papers
Revision

Tamil / English Medium Classes

ICT துறையில் 22 வருட கற்பித்தல் அனுபவம்

MS ICT COLLEGE
TP:0776577359, Mr.R.Kumaran - B.Sc.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்[illegible]